முதன்மை சார்பு நீதிமன்றம், பழனி

O.S.No. 23/2023

தேதி : 12-03-2026

(வா.சா.1) – திரு.பாரதிகண்ணன்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு 2-ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>2-ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

1. வங்கியில் யார் எங்களிடம் கடன் வாங்கினார் என்றால் 1ம் பிரதிவாதி. 1ம் பிரதிவாதியின் கணவர் உத்தரவாதம் எழுதி கொடுத்திருந்தார் என்றால் சரிதான். யாருடைய கடனிற்காக வாங்கப்பட்டது என்றால் 1ம் பிரதிவாதியின் கடனிற்காக. எதற்காக 2ம் பிரதிவாதியை இவ்வழக்கில் தரப்பினராக சேர்த்துள்ளோம் என்றால் உத்தரவாதம் கொடுத்த செல்வராஜ் இறந்துவிட்டதால் அவரின் மகன் என்பதால் சேர்த்துள்ளோம். உத்தரவாதம் கொடுத்தவர் இறந்துவிட்டதால் கடன் வாங்கிய 1ம் பிரதிவாதி தான் பொறுப்பாவர் என்றும், 2ம் பிரதிவாதி பொறுப்பாக மாட்டார் என்றால் சரியல்ல, உத்தரவாத ஆவணத்தில் அவரின் வாரிசும் பொறுப்பு என்று எழுதப்பட்டுள்ளது. நான் சொல்வது தவறு என்றும், உத்தரவாத ஆவணம் எழுதி கொடுத்த மனைவி உயிரோடு இருக்கும்போது அவர்தான் பொறுப்பாவரே தவிர 2ம் பிரதிவாதி பொறுப்பாகமாட்டார் என்றால் சரியல்ல. உத்தரவாதம் கொடுத்தவரின் வாரிசுகளையும் அந்த உத்தரவாதம் கட்டுப்படுத்தும் என்பதை காட்ட ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என்ன பரிகாரத்திற்காக வழக்கு தாக்கல்செய்துள்ளோம் என்றால் கடனை திருப்பி செலுத்தக்கோரி. 2ம் பிரதிவாதி அவரின் தந்தை சொத்தை அனுபவம் செய்து வருகிறார் என்று சொல்லியுள்ளேன் என்றும், 2ம் பிரதிவாதிக்கு அவரின் தந்தை சொத்தின் மீது நடவடிக்கை எடுப்பதில் தனக்கு ஆட்சேபணை இல்லை என்று சொல்கிறார் என்றால் சரியல்ல, தனிப்பட்ட முறையிலும் அவர் பொறுப்பாவர்.

2. 2ம் பிரதிவாதியின் தந்தை உத்தரவாதத்திற்கு கையெழுத்து போட்டதற்கு 2ம் பிரதிவாதி பொறுப்பாகமாட்டார் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள உயிர்ப்பிப்பு கடிதமும் வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. 1ம்

பிரதிவாதிக்கு எதிராக தான் கடனை வசூலிப்பதற்கு எங்களுக்கு உரிமை உள்ளது என்றும், 2ம் பிரதிவாதியை பொறுத்து உரிமை இல்லை என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதி தனிப்பட்ட முறையில் கடனை திருப்பி செலுத்த கடமைப்பட்டவரல்ல என்றும், 2ம் பிரதிவாதியின் தந்தை சொத்திலிருந்தும், 1ம் பிரதிவாதியின் சொத்திலிருந்தும் தான் வசூலிப்பதற்கு எங்களுக்கு உரிமையுள்ளது என்றால் சரியல்ல. கணக்கு விபர பட்டியல் தவறு என்றும், அதிக வட்டி கேட்டும் வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றும், எனவே 2ம் பிரதிவாதியை பொறுத்து வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

ஒம்./–K.ரேணுகாதேவி,

முதன்மை சார்பு நீதிபதி,
பழனி.